[1982 மார்ச் 15

கைத்தறி பாலியஸ்டர் துணி உற்பத்தி.

வினா எண் 506. திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி பாலியஸ்டர் துணி உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) கைத்தறி பாலியஸ்டர் துணி உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் திட்டம் தற்போது அமுலில் உள்ளது.

(ஆ) இத் திட்டத்தின்கீழ் முதன் முதலில் பாலியஸ்டர் ரகத்தில் சட்டைத் துணிகள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. இந்த ரகத்தினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு கீழ்க்கண்ட ரகங்களின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. பாலியஸ்டர் சட்டைத்துணி.
2. பாலியஸ்டர் சேலைகள்.
3. ஸ்பன் ரகம் (பாலியஸ்டர்).
4. பாலியஸ்டர் சூட்டிங்.
5. பாலியஸ்டர் வேட்டிகள்.

(முற்பகல் 9—30)

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : இந்த கைத்தறி பாலியஸ்டர் துணிகள் இந்தியா முழுவதும் விற்பனை செய்யப்படுகிறதா ? அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தியா முழுவதும் நம் கோ ஆப்டக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளுக்கும் தேவைப்பட்டவர்கள் வாங்கிச் செல்லலாம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : இந்த பாலியஸ்டர் துணிகளுக்கு அதிகமான அளவிற்கு மார்க்கட் இருக்கிற காரணத்தினால் மேலும் அதை கூடுதலாக உற்பத்தி செய்ய, தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் இந்தத துணிகளின் உற்பத்தியைப் பெருக்க அரசு சிறப்புத் திட்டம் ஏதாவது வைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பாலியஸ்டர் ஷர்ட்டிங் முதன் முதலாக ஸ்ரீவில்லிபுத்தூரில் நெய்யப்பட்டு பிறகு ராஜபாளையம், சுந்தரபாண்டியம், சின்னாளப்பட்டி, அருப்புக்கோட்டை, சத்திரப்பட்டி, கைத்தறிநெசவாளர் சங்கங்களில் உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1982 மார்ச் 15]

பாலியஸ்டர் சேலைகள் முதன்முதலாக கோவையில் ஆரம்பிக்கப்பட்டு அருப்புக்கோட்டை, ராஜபாளையம், சேலம், நாகர்கோவில் போன்றயிடங்களில் மேற்கொள்ளப்பட்டது. பாலியஸ்டர் ஸ்பன் ரகம் முதன்முதலாக மதுரையில் ஆரம்பிக்கப்பட்டு பிறகு திருத்தணி, ராஜபாளையம் போன்ற இடங்களில் உற்பத்தி செய்யப்பட்டது. பாலியஸ்டர் சூட்டிங் ஈரோடு, சென்னிமலையில் ஆரம்பிக்கப்பட்டதோடல்லாமல் இப்போது இதை நெய்யும் தறிகள் எண்ணிக்கை உயர்த்தப்பட்டுள்ளது. பாலியஸ்டர் வேட்டிகள் சேலம், ராமநாதபுரம், செங்கல்பட்டு, நாகர்கோவில் போன்றயிடங்களில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுவருகிறது. தற்போது 4,751 தறிகள் பாலியஸ்டர் துணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : இந்த பாலியஸ்டர் துணி அல்லது நூலுக்கு வரியைரத்து செய்யவேண்டுமென்று மத்திய அரசிடம் நாம் கோரியிருக்கிறோமா ? சுததிரப்பட்டி போன்ற வட்டாரங்களில் எல்லாம் இவை ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்கள் நெய்து தயாரித்த துணிகளை-கோ-ஆப்-டெக்ஸ்-டம் ஒப்படைக்கிறபோது காலாகாலத்தில் பணம் கிடைக்காத நிலையில் சில மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே அவர்களுக்கு சீக்கிரம் பணம் கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற பிரச்னை குறித்து அரசு தீவிர கவனம் செலுத்திவருகிறது. அப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : வெப்ப நாடுகளுக்கு ஏற்ற உடை வேட்டி என்பதால் மகாத்மா காந்திஜி அவர்கள் வேட்டியை மட்டும் உடுத்திக்கொண்டு சட்டையைக் கழற்றிவிட்டார்கள். எனவே வெப்ப நாடுகளான ஆப்பிரிக்கா, லத்தின் அமெரிக்கா, தூர கிழக்கு நாடுகள் இவற்றில் வேட்டியை அணிய பிரசாரம் செய்ய தமிழ்நாடு அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவரவர்கள் பழக்கத்திற்கு ஏற்பத்தான் உடைகள் அணிந்து கொண்டிருக்கிறார்கள். வேட்டி கூட நாம் ஒருவிதமாகவும் மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் வேறுவிதமாகவும் அணிந்து கொண்டிருக்கிறார்கள். ஆப்பிரிக்காவில் அவர்கள் வேட்டி மாதிரி வேறு ஒரு உடையை அணிந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் அணிகிற உடை, நம் கைத்தறித் துணி அவர்கள் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு இருக்கிறது. ஆகவே இந்த ப்ளீடிங் மெட்ராஸ் என்ற துணி ஆப்பிரிக்கா நாடுகளில் நல்ல விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.